


திருநின்றவூர் ஜெயா பொறியியல் கல்லூரி 19ம் ஆண்டு விழாவில் பல்கலை அளவில் ரேங்க் எடுத்த மாணவர்களுக்கு ரஷ்ய துணை தூதர் மைக்கேல் கார் பேட்டோவ் காசோலை வழங்கினார். அருகில் கவ்னென்ட் இந்தியா முதன்மை செயல் அலுவலர் ஜோஸ்வா மதன் சாமுவேல், கல்லூரி தலைவர் பேராசிரியர் கனகராஜ், முதல்வர் டாக்டர் விஜயராகவன்.

# ஜெயா கல்லூரி 19ம் ஆண்டு விழா

திருவள்ளூர், ஏப். 9: திருநின்றவூர் ஜெயா கல்லூரி 19ம் ஆண்டு விழா நடந்தது. கல்லூரி தலைவர் பேராசிரியர் கனகராஜ் தலைமை வகித்தார். துணைத் தலைவர் கே.நவராஜ், செயலாளர் விஜயகுமாரி முன்னிலை வகித்தனர். நிர்வாக அலுவலர் ரவி வரவேற்றார். முதல்வர் பேராசிரியர் டாக்டர் கே.விஜயராகவன் ஆண்டறிக்கை வாசித்தார்.

சிறப்பு விருந்தினராக ரஷ்ய துணைத் தூதர் மைக்கேல் ஜெ.கார் பேட்டோவ் கலந்து கொண்டு பல்கலைக்கழக அளவில் ரேங்க் எடுத்த மாணவர்களுக்கு காசோலை வழங்கினார்.

மாநில மற்றும் மண்டல அளவில் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு கவ்னென்ட் இந்தியா முதன்மை செயல் அலுவலர் ஜோஸ்வா மதன் சாமுவேல் பரிசு வழங்கினார். எம்.சி.ஏ. துறைத் தலைவர் கேசவன் நன்றி கூறினார்.